தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே சிறுமி கடத்திக் கொலை!

# குற்றவாளிக்கு இரட்டை தூக்குத் தண்டனை!

## 76 நாட்களில் தீர்ப்பு வழங்கிய தூத்துக்குடி போக்ஸோ நீதிமன்றம்!

தூத்துக்குடி, மே 26-

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த பிளஸ் டூ மாணவி, கடந்த மார்ச் மாதம் 10ஆம் தேதி மாலை தனது வீட்டில் இருந்து அருகேயுள்ள காட்டுப்பகுதிக்கு இயற்கை உபாதை கழிக்க சென்ற நிலையில் காணாமல் போனார். அடுத்த நாள் மார்ச் 11ஆம் தேதி காணாமல் போன மாணவி காட்டுப்பகுதியில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு அலங்கோலமான நிலையில் உடலில் காயங்களுடன் சடலமாக கிடப்பது தெரிய வந்தது. தகவலறிந்த போலீசார் வேடநத்தம் கிராம காட்டுப்பகுதிக்கு வந்து மாணவியின் சடலத்தை கைப்பற்றி தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இக்கொடூர கொலை சம்பவத்தை கண்டு அதிர்ச்சியடைந்த வேடநத்தம் கிராம மக்கள், தூத்துக்குடி மதுரை தேசிய நெடுஞ்சாலையிலும், தூத்துக்குடி ராமேஸ்வரம் மாநில நெடுஞ்சாலையிலும் தொடர்ந்து 12 மணி நேரத்துக்கு மேலாக சாலை மறியல் போராட்டம் நடத்தினர். இந்நிலையில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக செயல்பட்ட மகளிர் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரவீனா மார்ச் 12ஆம் தேதி சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

இந்நிலையில் காற்றாலை கோபுர சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகி இருந்த காட்சிகள் மூலம் சாயல்குடியை சேர்ந்த தர்ம முனீஸ்வரனை போலீசார் மார்ச் 19ஆம் தேதி தூத்துக்குடியில் வைத்து கைது செய்தனர். குளத்தூர் காவல் நிலையத்தில் தர்ம முனீஸ்வரன் மீது வழக்குப்பதிவு செய்து, மார்ச் 20ஆம் தேதி காலை பலத்த பாதுகாப்புடன் வேடநத்தம் காட்டுப்பகுதிக்கு போலீசார் அவரை அழைத்து வந்து, சம்பவத்தை நடித்து காண்பிக்க வைத்து, அதை வீடியோவாக பதிவு செய்தனர்.

குற்றவாளி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மார்ச் 20ஆம் தேதி மாணவியின் குடும்பத்தினர் தூத்துக்குடி அரசு மருத்துவமனையிலிருந்து அவரது சடலத்தை பெற்று 10 நாட்களுக்குப் பிறகு தகனம் செய்தனர்.

இச்சம்பவம் குறித்த வழக்கானது தூத்துக்குடி போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் போலீசார் விரைந்து செயல்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு தொடர்பாக பல்வேறு சாட்சிகளிடம் விசாரணை நடைபெற்றது. கடந்த 21ஆம் தேதி அனைத்து விசாரணை நடைமுறைகளும் முறைப்படி நிறைவடைந்ததை தொடர்ந்து, இந்த வழக்கில் மே 25ஆம் தேதி திங்கட் கிழமையான நேற்று தூத்துக்குடி மாவட்ட போக்சோ நீதிமன்ற நீதிபதி பிரீத்தா தீர்ப்பு வழங்கினார்.

கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளி தர்ம முனீஸ்வரனுக்கு இரட்டை தூக்கு என தூத்துக்குடி போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

இனிமேலாவது வீரவசனம் பேசாமல்

# மாற்றத்தைக் கொடுங்கள் CM சார்!

Dear CM Vijay Sir

போதும் சார்! தமிழ்நாடு முழுவதும் பிஞ்சு குழந்தைகளின் ஓலங்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறது. அதற்கான காரணத்தை கண்டறியவும் மிருக மனிதர்களை ஒடுக்கவும் தங்களுக்கான நேரம் போதும் என்றே தோன்றுகிறது சார். தயவுசெய்து ஆக்ஷனில் இறங்குங்கள் சார்!

'உங்களின் ஹீரோயிசத்தைப் பார்த்துதான் உங்களுக்கு ஓட்டுப் போட்டோம்' என்கிறார்கள் மக்கள். இறந்த குழந்தைகளை நினைத்து மனம் வெதும்பும் நேரத்தில், அப்பாவி மக்கள் பேசும் இதுபோன்ற வார்த்தைகளாலும் வேதனை ஏற்படுகிறது. அவர்களுக்கு எப்படி சொல்லி புரியவைப்பது என்றே தெரியவில்லை.



அன்பில் மகேஸ் பொய்யாமொழி
முன்னாள் அமைச்சர்

வாழ்வும் அரசியலும் என்பது ஒரு ஹீரோ Intro பாட்டு, ஒரு குத்துப்பாட்டு, ஒரு செண்டிமெண்ட் பாட்டு கிடையாது! வாழ்வும் அரசியலும் என்பது ரவுடிகளை எதிர்த்து 5 சண்டை காட்சிகளை Shoot செய்வது கிடையாது! வாழ்வும் அரசியலும் என்பது துப்பாக்கி படம் போல சுட்டுக்கொண்டே இருப்பது கிடையாது! நிஜ வாழ்க்கையில் காலருக்குள் இருந்து சிகரெட்டை எடுக்க முடியாது! இது அப்பாவி மக்களுக்கு தெரியுமோ தெரியாதோ!

ஆனால் உங்களுக்கு நன்றாகவே தெரியும் CM Sir. நன்றாகவே தெரிந்திருந்தும் தங்களின் தேர்தல் பிரச்சாரம் முழுவதும் வீரவசனம் பேசுனீர்கள். திரையில் தோன்றும் விஜயை போலவே பிரச்சாரத்திலும் மக்களை ஏமாற்றுனீர்கள். அதன் பலனாக மக்கள் இப்போது கேள்வி கேட்கிறார்கள். அறியாமையால் கேள்வி கேட்கிறார்கள் என்று எண்ணி விடாதீர்கள். அவர்களின் கேள்வி உங்களுக்கானது என்பதை மறந்துவிடாதீர்கள்.

உடனடியாக நிஜ ஆக்ஷனில் இறங்குங்கள். அல்லது வாயை திறந்து பேசுங்கள். தனது தங்கை நலமாக வாழ வேண்டும் என ரவுடிகளை வேட்டையாடிய திருப்பாச்சியை போல நீங்கள் மாற வேண்டாம். Real Lifeஇல் அப்படி மாறவும் முடியாது சார். உண்மையில் குழந்தைகளுக்கான அன்புள்ள மாமாவாக மாறுங்கள் சார். உங்களின் பக்கம் நின்று சொன்னால் 'அந்தக் குழந்தைகள் எல்லாரும் உங்களுக்காக வாக்குச் சேகரித்தவர்கள்' என்பதை மறவாதீர்கள் சி.எம். சார்.

குழந்தைகளின் ஓலம் ஒருபக்கம் என்றால் மின்வெட்டு மக்களை தூக்கமிழக்கச் செய்கிறது. இப்படியே சென்றால் தொழில் நிறுவனங்கள் எப்படி தமிழ்நாட்டை நம்புவார்கள் சார்? முதலில் மக்கள் எப்படி உங்களை நம்புவார்கள்?

**ஆட்சி என்றால் அரசு இயந்திரம் என்ற ஒன்று உள்ளது என்பதை கட்சிக்காரர்களுக்கு சொல்லிக்கொடுங்கள். தன்னோடு இருந்தவர்கள் எல்லாம் MLA ஆகிவிட்டார்கள், அமைச்சர் ஆகிவிட்டார்கள் எனும் ஆதங்கத்தில் தங்கள் கட்சிக்காரர்கள் எல்லாம் நேரடியாக ஆய்வுப்பணிக்கு சென்று விட்டார்கள். அதன் உச்சமாக இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் அவர்கள் (பஜ்ரங்தள் கொடியுடன் Profile Photo வைத்திருந்தாரே அவர் தான்) 'கட்சிக்காரர்களை உடனே ஆய்வு செய்ய சொல்லுங்க...' என உத்தரவிட்டுள்ளார். ஆகா... போறப்போக்கைப் பார்த்தால் ஆய்வுப்பணிக்கு செல்லும் கட்சிக்காரர்களுக்கு அலவன்சும் கொடுப்பார் போல!**

CM சார் தங்களை கிண்டல் செய்கிறேன் என நினைத்து விடாதீர்கள். உள்ளதை உள்ளபடியே சொல்கிறேன். இவையெல்லாம் தங்களுக்கும் நிச்சயமாக தெரிந்திருக்கும். ஆனால் ஏன் இப்படி மௌனியாக உள்ளீர்கள்?

CM விஜய் சார் 'மாற்றத்தைத் தருகிறேன்' என்று சொல்லித்தான் ஆட்சிக்கு வந்தீர்கள். மக்களும் உங்களை நம்பியுள்ளார்கள். தி.மு.க. சட்டைப்பையில் இருந்தவர்களையும் (காங்கிரஸ்!) எடுத்துக்கொண்டீர்கள் அல்லவா! மக்களின் நம்பிக்கையையும் தி.மு.க. சட்டைப்பையில் இருந்த காங்கிரஸ்காரர்களையும் வைத்துக்கொண்டு ஆட்சி அமைத்துள்ளீர்கள் அல்லவா! ஏதாவது மாற்றத்தை கொடுங்கள் சார். இனிமேலாவது வீரவசனம் பேசாமல் ஏதாவது செய்யுங்கள் ப்ளீஸ்!

விளாத்திகுளம் சம்பவம் விரைந்து நீதியைப் பெற்றுத்தந்த காவல்துறை மற்றும்

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி வரவேற்பு!

சென்னை, மே 26-

விரைந்து நீதியைப் பெற்றுத் தந்த காவல்துறை மற்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தமது சமூக வலைதளத்தில்பதிவிட்டிருப்பதாவது:-

விளாத்திகுளம் வேடநத்தம் அருகே பன்னிரண்டாம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி கொலை செய்யப்பட்ட வழக்கில், குற்றவாளிக்கு நேற்று தண்டனை வழங்கியுள்ளது தூத்துக்குடி போக்ஸோ நீதிமன்றம்.

பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்தினருடன் துணை நின்று, குற்றம் நடந்த 76 நாட்களில் இவ்வழக்கின் விசாரணையை விரைந்து நடத்தி முடித்து, நீதியைப் பெற்றுதந்துள்ள முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கும் நன்றி.

குற்றவாளிக்கான தண்டனையை சட்டம் உறுதி செய்துவிட்டது. இனி இது போல எந்தவொரு பெண்ணுக்கும் நடக்காதவாறு, கூட்டு மனசாட்சியோடு இயங்கும் இந்தச் சமூகம் தான் உறுதிசெய்யவேண்டும். அதற்கான வழிகளை அரசு தான் ஏற்படுத்தித் தர வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# மதுரை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் டி.நாகராஜன் மறைவு!

## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ., கழகத்தினர் நேரில் அஞ்சலி !

மதுரை, மே.26-

மதுரை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் டி.நாகராஜன் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம் அன்னாரின் உடலுக்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ., மற்றும் திரளான கழகத்தினர், பொதுமக்கள் நேரில் அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.



மதுரை தெற்கு மாவட்ட அவைத் தலைவராக பதவி வகித்தவர் டி.நாகராஜன்.

இவர் தலைமை கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர் ஆவார், மேலும் கழகப் பணியில் முழு ஈடுபாட்டுடன் சிறப்பாக செயல்பட்ட திருமங்கலம் நாகராஜன் கழகத்திற்கு சோதனை வந்த காலங்களில் எல்லாம் கழகத்தை விட்டு வேறு எங்கும் செல்லாமல் தொடர்ந்து கழக பணியாற்றி மக்கள் மத்தியிலும் கழகத்தினரிடமும் நற்பெயர் பெற்றவர்.

இவர் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து நேரில் சென்ற மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ., அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்

இதேபோன்று கழகத்தினர், பொதுமக்கள், வியாபாரிகள், விவசாயிகள் என அனைத்து தரப்பினரும் அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறினார்கள்ம

றைந்த அவைத்தலைவர் டி.நாகராஜனுக்கு கௌசல்யா என்ற துணைவியாரும், வீர பிரேமா, கயல்விழி, மணிமேகலை என்ற மூன்று பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

வந்தவாசி அருகே

# 14 வயது சிறுமியை லாரியில் கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை!

## அண்ணன் - தம்பி உள்பட 3 பேர் 'போக்சோ' சட்டத்தில் கைது!

திருவண்ணாமலை, மே 26-

திருவண்ணமை மாவட்டம் வத்தவாசியில், 14 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி லாரியில் அழைத்து சென்று கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக அண்ணன், தம்பி மற்றும் சிறுமியை அழைத்து செல்வதற்கு உடந்தையாக இருந்த டிரைவரின் மனைவி ஆகிய 3 பேரை போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் கைது செய்தனர்.

இதுபற்றி போலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:-

போளூர் தாலுகாவில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 14 வயது சிறுமி. அவரது தாய் மற்றும் தந்தை மாதம்தோறும் வந்தவாசி சேத்துப்பட்டு சாலையில் உள்ள சைதானி பீவி தர்காவிற்கு வந்து செல்வார்களாம். இதேபோல் ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பகுதியைச் சேர்ந்த பாத்திமா (30) என்பவரும். மாதாமாதம் இந்த தர்காவிற்கு வருவாராம்.

இந்த நிலையில் தர்காவிற்கு வந்திருந்த 14 வயது சிறுமியிடம் பாத்திமாவிற்கு பழக்கம் ஏற்பட்டது. அப்போது பாத்திமா 14 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி ஆற்காட்டிற்கு பேருந்தில் அழைத்து சென்றதாக கூறப்படுகிறது.

பின்னர் பாத்திமாவின் கணவர் இம்ரான்பாஷா (35), அவரது தம்பி கிளீனர் அஜ்மல் பாஷா (30) ஆகிய இரண்டு பேரும் 14 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி லாரியில் ஆற்காடு பகுதியில் இருந்து பெங்களூருக்கு அழைத்து சென்றதாக கூறப்படுகிறது.

அப்போது, லாரியில் பெங்களூர் செல்லும் வரை 2 பேரும் சேர்ந்து சிறுமியிடம் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது. லாரி பெங்களூர் பகுதிக்கு சென்று நின்றவுடன் லாரியில் இருந்து சிறுமி இறங்கினார். அப்போது அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் 2 பேரும் சேர்ந்து தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறினார். உடனே பொதுமக்கள் அந்த இரண்டு பேரையும் பிடித்து தர்ம அடி கொடுத்து பெங்களூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அங்கு போலீசார் வந்து சிறுமியை மீட்டு காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை செய்தனர். அப்போது பெங்களூர் போலீசர் சிறுமியிடம் "எங்கு இருந்து உன்னை இவர்கள் அழைத்து வந்தனர்" என்று கேட்டனர்.

அப்போது அந்த சிறுமி வந்தவாசி பகுதியில் இருந்து என்னை அழைத்து வந்தனர் என்று கூறியிருக்கிறார். இதையடுத்து பெங்களூர் போலீசார் வந்தவாசி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளனர். பின்னர் பெங்களூர் போலீசார், சிறுமியை மகளிர் பாதுகாப்பு இல்ல விடுதியில் பொதுமக்கள் உதவியுடன் தங்க வைத்தனர். இதனைத் தொடர்ந்து பெங்களூர் போலீசார் அங்கு வழக்குப்பதிவு செய்தனர்.

இதையடுத்து வந்தவாசி போலீசார் சென்று சிறுமியை அழைத்து வந்து வந்தவாசி காவல் நிலைய த்திற்கு வழக்கை மாற்றினர்.

பின்னர் வந்தவாசி போலீசார், 14 வயது சிறுமியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக இம்ரான் பாஷா மற்றும் அவரது தம்பி அஜ்மல் பாஷா, சிறுமியை அழைத்து செல்வதற்கு உடந்தையாக இருந்த இம்ரான் பாஷாவின் மனைவி பாத்தியா ஆகிய மூன்று பேரையும் கைது செய்து வந்தவாசி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

பின்னர் 3 பேரும் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் லாரியையும் போலீசார் பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மதுரை தெற்கு மாவட்ட

# அவைத் தலைவர் டி.நாகராஜன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

மதுரை, மே.26 -

மதுரை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் டி.நாகராஜன் உடல் நலக் குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த மதுரை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் டி.நாகராஜன் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் கழகத் தோழர்களுக்கும் ஆறுதல்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.




கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் சேப்பாக்கம் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் ஜூன் 3 வர இருப்பதை ஒட்டி நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளரும் ஸ்ரீபாலாஜி மேல்நிலைப்பள்ளி தாளாருமான அன்புகுமரன் தலைமையில் சேப்பாக்கம் அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்றம் சார்பாக பாண்டிச்சேரி மகாத்மா காந்தி மருத்துவமனை சார்பாக மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றிய விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன், அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்றத் தலைவர் பிரசாத், துணைத் தலைவர் அஜித் உடன் இருந்தனர். முகாமில் பொதுமக்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை மேற்கொண்டனர்.

